ISSN - 2448 - 9883
Volume 3 (II)

# PROCEEDINGS

## 3rd International Conference on Contemporary Management

"Critical Solutions for Contemporary Issues"

ICCM

Faculty of Management Studies and Commerce
University of Jaffna, Sri Lanka

28th & 29th, July 2016

**இறால் கூட்டு தொழில்: சங்குபிட்டி - கேரதீவு பகுதியை சிறப்பாக கொண்ட - ஓர் புவியியல் ஆய்வு**
நிர்ஷியா.சி, நிவேஜா.க, தூசை.ஏ.எஸ் 75-84

**கிழக்கிலங்கைப் புராதன வரலாற்றில் பெண்கள் (பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)**
கௌரி.பு 85-92

**கோறளைப்பற்றுப் பிரதேசப் பாடசாலைகளின் நூலகம் மற்றும் கற்றல் வள நிலையங்களின் முகாமைத்துவம் - ஓர் ஆய்வு**
நிதிகரன்.கே. 93-106

**போருக்கு பிந்திய வடமாகாணச்சூழலில் சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் வகிபங்கு (கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டது)**
தர்ஷிகா.பா., ஞானகுமாரன்.நா 107-115

**யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் நிகழ்கால அமைப்பு ஓர் உருபனியல் ஆய்வு**
செந்தூரன்.சி. 116-125

**மட்டக்களப்பு கண்ணகியம்மன் சடங்கு வழிபாட்டில் கண்ணகி வழக்குரைக் காப்பியத்தின் வகிபங்கு - ஓர் ஆய்வு**
மேகராசா.த. 126-137

**தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் : தேவையும் சவால்களும்**
குகன்.கோ 138-145

**ஈழத்து இசை வரலாற்றில் யோகர் சுவாமிகளின் பாடல்கள் - ஓர் ஆய்வு -**
சுகன்யா.அ 146-154

**இலங்கையின் தேசிய ஒருங்கிணைப்பில் அரசகுடியேற்றத்திட்டங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் ஓர் ஆய்வு**
அ.அன்பரசி, ச.சத்தியசீலன் 155-169

**மொழியும் இலக்கியமும் : எஸ் பொன்னுத்துரையின் "வீ" சிறுகதைத்தொகுதியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.**
சர்மினி.தி, அருந்தாகரன்.க 170-180

Proceeding of International Conference on Contemporary Management - 2016 (ICCM-2016), pp 85-92

# கிழக்கிலங்கைப் புராதன வரலாற்றில் பெண்கள் (பிராமிக் கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

கௌரி.பு

## ஆய்வுச்சுருக்கம்

உலக வரலாற்றைப் பொறுத்தவரையில் ஆதியில் பெண்கள் ஆண்களை விட உயர் நிலையில் காணப்பட்டனர். ஆட்சியும் சொத்துரிமையும் நீண்ட காலம் பெண்களிடையே இருந்துவந்தன. கிழக்கிலங்கையிலும் பெண்கள் சிறப்புப் பெற்றிருந்தமைக்கு மருமக்கள் தாய முறையை அடிப்படையாகக் கொண்ட தாய்வழி மரபு காணப்பட்டமை சிறந்த சான்றாகும். எனவே கிழக்கின் பூர்வீக வரலாற்றில் பெண்களுக்கென தனியிடம் உண்டு.கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரை தென்னாசியாவில் புழக்கத்திலிருந்த பிராமிக் கல்வெட்டுக்கள் தொடர்பான ஆய்வுகள் பல நடைபெற்றுள்ள போதிலும் பெண்கள் தொடர்பான விடயங்கள் ஆய்விற்குட்படுத்தப்படாத ஒன்றாகவே விளங்குகின்றது. எனவே இக்கல்வெட்டுக்களினூடாக குறித்த காலப்பகுதியில் கிழக்கிலங்கை வரலாற்றில் பெண்களின் வகிபங்கு பற்றி ஆய்வு செய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இத்தகைய சிறப்பிடம் பெற்றிருந்த பெண்கள் தான காரர்களாகப் பிராமிக் கல்வெட்டுக்களில் முகங்காட்டுகின்றனர். இப்பிராந்தியத்தில்கண்டறியப்பட்ட 182 கல்வெட்டுக்களை பேராசிரியர் செ.பரணவிதான வெளியிட்டுள்ளார். இவற்றுடன் அண்மைய ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளவற்றுடன் சேர்த்து ஏறத்தாழ 192 கல்வெட்டுக்கள் இங்கு ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களில் ஒரு கல்வெட்டுத் தவிர ஏனையவற்றில் பெயரிடப்படுகின்ற பெண்கள் பொதுவாக உபாசிகைகளாகவே (பக்தை) உள்ளனர். ஏறத்தாழ பதினெட்டுக் கல்வெட்டுக்களில் உபாசிகைளாக (பக்தை) குறிப்பிடப்பட்டுள்ளனர்.இக்கல்வெட்டுக்கள் எழுதப்பட்ட காலம் முதலாக பெண்கள் தமது சமய ரீதியான நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு உரிமையுடையோராகக் காணப்பட்டுள்ளனர். வெல்லாவெளியில் அண்மையில் கண்டறியப்பட்டுள்ள கல்வெட்டொன்றில் பெண் துறவி ஒருவர் பற்றிக் கூறப்படுகின்றது. இது பெண்களின் சுதந்திரமான சமய நடவடிக்கையை மேலும் உறுதிப்படுத்துகின்ற சான்றாக அமைகின்றது. இக்கல்வெட்டுக்களில் உயர்நிலையிலுள்ள பெண்கள் பற்றியே அதிகளவில் பேசப்படுகின்றது. சமூகத் தலைமையாளராகக் கருதத்தக்க பருமக, ஊர்த் தலைமையாளரான கமிக, மகாராஜாவின் மகனான அய (இளவரசன் அல்லது உயர் குலத்தவன்), கிராமத் தலைவனான கமிக, வணிகர் ஆகியோரின் மனைவியராகவும்,“அபி“ எனப்படும் உயர்குலப் பெண்ணாகவும் இவர்கள் பெயர் குறிப்பிடப்படுகின்றனர். இவ்வாறு கணவன், மகன், தந்தை ஆகியோருடன் இணைந்தவகையிலேயே இவர்கள் பற்றிய விபரங்கள் இவற்றிலே வருகின்றன. இவ்விடயம் ஆய்விற்குரியதாக அமைகின்றது. பெண்கள் தமது பெயரினால் குகைத் தானங்களை வழங்கியமையை பார்க்கின்றபோது அக்காலம் முதலே சொத்துடைமை உடையவர்களாகவும், தமது இஸ்டப்படி அதனை வழங்குகின்ற உரிமையுடையோராகவும் இவர்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது. ஏனெனில் உரிமையுடைய ஒன்றையே தானமாக வழங்க முடியும். அவர்களை பெயரிடுகின்ற போது கணவர் அல்லது தந்தையரின் பெயர்

வரலாற்றுத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், pgowry24@yahoo.com

குறிப்பிடுகின்றபோதும் தானமானது குறித்த பெண்களால் வழங்கப்படுவதாகவே கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. தமிழ் பெண் ஒருத்தி பற்றிய செய்தி பிராமிக் கல்வெட்டுக்களில் வருகின்றது. எனவே கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதலாக பெண்கள் முக்கியத்துவம் பெற்றவர்களாக விளங்கியமைக்கு கிழக்கிலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் சிறந்த சான்றாக அமைகின்றன.

**திறவுச்சொற்கள்:** பெண்கள், பிராமிக் கல்வெட்டுக்கள்,உபாஸிகை

**1. அறிமுகம்:**

நீண்ட காலமாக இலங்கை வரலாறு பற்றிய தொல்லியல், வரலாற்று ஆய்வுகளில் அதிகளவில் கவனத்திற் கொள்ளப்படாத பிராந்தியமாக கிழக் கிலங்கை காணப்படுகின்றது. எனினும் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகள் இப்பிராந்தியம் வரலாற்றடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை வெளிப் படுத்தின. அதில் பிராமிக் கல்வெட்டுக் களுக்கு முக்கிய பங்குண்டு.

ஏறத்தாழ கி.மு எட்டாம் நூற்றாண்டு முதல் இலங்கையில் அறிமுகமாகிய இரும்புக்காலத்தின் (வரலாற்று உதய காலம்) இடைப்பகுதியில் எழுத்துக்களின் தோற்றத்தைக் காணமுடிகின்றது. அந்த வகையில் பொதுவாக பிராமிக் கல்வெட்டுக் கள் எழுதப்பட்ட காலமாக கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றா ண்டு வரையான காலம் கணிக்கப்படுகின் றது. ஆயினும் அதற்கு முந்தைய காலத்திற் குரியதான பிராமி எழுத்துப் பொறித்த கலவோடுகள் பலவும் நாட்டின் பல பகுதிகளிலும் கிடைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. கிழக்கைப் பொறுத்த வரையில் முழுமையானதும், முறையானது மான அகழ்வாய்வுகள் நடாத்தப்படாத நிலையில் கி.மு மூன்றிற்கு முற்பட்ட வரலாற்றை எழுதுவதில் பல்வேறு சிரமங் களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந் நிலை யில் வரலாற்றுக் காலமான கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதலான விடயங் களை வெளிப்படுத்துவதில் பிராமிக்கல் வெட்டுக் கள் முக்கியத்துவமிக்க வரலாற்று மூலமாக அமைகின்றது. எனவே இக்காலத்திற்குரிய தான இலங்கையின் கிழக்குப் பகுதியில் கண்டறியப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் அறிமுகமாகின்ற பெண்கள் பற்றி ஆராய் வதாக அவ்வாய்வு அமைகின்றது. புராதன கிழக்கிலங்கையில் பெண்களின் வகிபங்கு தொடர்பாக ஆராய்வதற்கு போதுமான தொல்லியல் ஆதாரங்களோ இலக்கிய ஆதாரங்களோ கண்டறியப்படாத நிலையில் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் மட்டும் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படு கின்றன.

இலங்கையில் இதுவரை இரண்டாயிரத் திற்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இக்கல் வெட்டுக்கள் பிராமி எனப்படும் வரிவடிவத் தில் பிராகிருத மொழியில் பௌத்த துறவிகளுக்கு அல்லது பௌத்த சங்கத்திற்கு அனைத்து பிரிவு மக்களும் நன்கொடையாக வழங்கிய குகை, கற்படுக்கை, நிலம், குளம், கால்வாய், தானியம் தொடர்பான செய்திகளைக் கூறுகின்றன. இவற்றில் பலவற்றில் தானமளித்தோர் பெயர், அவரின் வம்சம், பட்டம், பதவி, தொழில், சமயம், சமூகம், இடப்பெயர் என்பவையும் இடம்பெறுகின்றன.

உலக வரலாற்றைப் பொறுத்த வரை யில் ஆதியில் பெண்கள் ஆண்களை விட உயர் நிலையில் காணப்பட்டனர். ஆட்சியும் சொத்துரிமையும் நீண்டகாலம் பெண்களி டையே இருந்துவந்தன. மட்டக்களப்பு சமூக மரபிலும் சொத்துரிமையானது தாய்வழியில் வருகின்ற மருமக்கள் தாய முறைபேணப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

**2. ஆய்வு நோக்கம்:**

கிழக்கிலங்கையின் வரலாற்றில் பெண்கள் சிறப்புப் பெற்றிருந்தமைக்கு மிக நீண்ட காலமாக மருமக்கள் தாய முறையை அடிப்படையாகக் கொண்ட தாய்வழி மரபு இங்கு காணப்பட்டமை சிறந்த சான்றாகும். இலங்கையின் புராதன வரலாற்றை வெளிக்கொண்டுவருகின்ற மூலாதாரங்களில் முக்கியமானதான பிராமிக் கல்வெட்டுக்கள் தொடர்பான ஆய்வுகள் பல நடைபெற்றுள்ள போதிலும், அவற்றில் பெண்கள் தொடர்பான விடயங்கள் முழுமையாக ஆய்விற்குட் படுத்தப்படவில்லை. எனவே இக்கல்வெட்டுக் களினூடாக கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் கிழக்கிலங்கை வரலாற்றில் பெண்களின் வகிபங்கு எத்தகையது என்பதைக் கண்டறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

**3. ஆய்வின் அணுகுமுறை:**

கிழக்கிலங்கையில் அடையாளங் காணப்பட்டு வெளியிடப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களின் படிகள், நிழற்படங்கள் என்பவற்றை மூலமாகக் கொண்டு அவற்றினை ஆய்விற்குட்படுத்துவதுடன், அத்தகவல்களைப் பயன்படுத்தி அவை எழுதப்பட்ட காலத்தில் பெண்களது வகிபங்கு பற்றி ஆராய்ந்து கண்டறிவதற்கு வரலாற்று ஆய்வு முறை பயன்படுத்தப் படுகின்றது. இக்கல்வெட்டுக்கள் ஊடாக தெரியவரும் வரலாற்று உண்மைகளை சமகால இலங்கை வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள், தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்கள், பிற தொல்லியல் ஆதாரங்கள் என்பவற்றுடன் ஒப்பிட்டு உண்மைகளைக் கண்டறிவதற்காக ஒப்பீட்டு ஆய்வு முறையும் பயன்படுத்தபடுகின்றது.

**4. ஆய்வுப் பரப்பு:**

இவ்வாய்வானது மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை எனும் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கிலங்கையில் 1970களில் கண்டறியப் பட்டு பேராசிரியர் செ.பரணவிதானவால் வெளியிடப்பட்ட 182 கல்வெட்டுக்கள், மற்றும் அண்மைய ஆய்வுகளில் பேராசிரியர். சி.பத்மநாதன், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் முதலானோரால் கண்டறியப்பட்டுள்ள வற்றுடன் சேர்த்து ஏறத்தாழ 192 கல்வெட்டுக்கள் இங்கு ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரையான காலப்பரப்பு ஆய்வுப் பரப்பாகக் காணப்படுகின்றது.

**5. ஆய்வு மூலங்கள்:**

இவ்வாய்விற்கான முதன்நிலைத் தரவுகளாக மட்டக்களப்பு தேசத்தில் 1970 களில் பேராசிரியர் எஸ். பரணவிதான அவர்களால் கண்டறியப்பட்டு Inscription of Ceylon என்னும் நூலில் வெளியிடப்பட்ட 182 பிராமிக் கல்வெட்டுக்களுடன், அண்மைய ஆய்வுகளில் கண்டறியப பட்டுள்ள 10 பிராமிக் கல்வெட்டுக்களும், மகாவம்சம் முதலான பாளி இலக்கியங்கள், தொல்லியல் மேலாய்வுகளில் கிடைத்த சான்றுகள் என்பன அமைகின்றன. இவை தவிர இவ்வாய்வுடன் தொடர்புடைய முன்னைய ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மூலம் கிடைக்கும் தகவல்கள் இரண்டாம் நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

**6. பிராமிக் கல்வெட்டுக்களில் அறிமுகமாகின்ற பெண்கள் யார்?**

பிராமிக் கல்வெட்டுக்கள் பொதுவாக பௌத்த துறவிகளுக்கு வழங்கிய தானங்களைப் பற்றியவையாக அமைகின்றமையால், இவற்றில் பெயரிடப்படுகின்ற பெண்கள் உபாசிகைகளாகவே (பக்தை) உள்ளனர். வெல்லாவெளியில் அண்மையில் கண்டறியப்பட்டுள்ள கல்வெட்டொன்றில் மாத்திரம் பெண் துறவி ஒருவர் பற்றிக் கூறப்படுகின்றது.

இக்கல்வெட்டுக்கள் எழுதப்பட்ட காலம் முதலாக பெண்கள் தமது சமய ரீதியான நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு உரிமையுடையோராகக் காணப்பட்டுள்ளனர். பெண்கள் இறைவன் மீது பக்தி கொண்டும், பக்தியுடன் கூடிய காதல் கொண்டும் தமது சமய உணர்வினை வெளிப்படுத்தியமைக்கு பழந் தமிழிலக்கியங்களில் பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றன. ஏறத்தாழ கிழக்கில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள 192 கல்வெட்டுக்களில் 17 இல் பெண்கள் பௌத்த சமயப் பக்தைகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று கி.பி. நான்காம் நூற்றாண்டிற்குரிய நான்குவரி தமிழ்பிராமிக் கல்வெட்டொன்றில் பெண்ணொருத்தியால் மேற்கொள்ளப்பட்ட தானசெய்தி பற்றிய செய்தி தமிழகத்தில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். “பெரும்பொகழ்” என்ற ஊரைச்சேர்ந்த சேக்கந்தி என்பவரின் தாயான சேக்கன்தண்ணி என்பவர் இந்த பள்ளியைச் செய்வித்தார் என்பது இதன் பொருளாகும். சேக்கந்தண்ணி என்பதனை சேக்கந் + அண்ணி எனப்பொருள் கொண்டு, இப்பெயர் சமணப்பெண்துறவியைக் குறிப்பிடுவதாகக் கொள்ளப்படுகின்றது. சே என்பது இங்கு குடிப்பெயராகக கருதப்படுகின்றது. சீவகசிந்தாமணியில் “கந்தி“ என்பது பெண்துறவி என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சூடாமணி கந்தி, கௌந்தி எனும் பெண்துறவிகள் பற்றிய செய்திகளும் தமிழகத்தில் கிடைத்துள்ளதனூடாக இங்கு சேக்கன் தண்ணி என்பவள் பெண்துறவி எனவும் கருதப்படுகின்றது. அவ்வாறாயின் துறவி ஒருவர் எவ்வாறு தானம் வழங்க முடியும் என்ற வினா எழுகின்றது. சேக்கந்தண்ணி என்பவள் இங்கு தானம் வழங்கியவளாகவே இருத்தல் வேண்டும். தமிழகத்தில் சமகாலத்தில் காணப்பட்ட அதேநிலை இலங்கையிலும் காணப்பட்டுள்ளது.

### 6.1 பருமகவின் மனைவி

பருமகவின் மனைவியர் பற்றிய குறிப்புக்கள் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. சமுதாய படி நிலையில் பருமக என்பது ஒரு பிரதேச சமுதாய வகுப்பினுடைய தலைவனை குறிப்பிடும் பெயராகும். இது கி.பி 1 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட 374 கல்வெட்டுக்களில் பட்டப்பெயராக பயன் படுத்தப்பட்டுள்ளமை அக்கால சமூகத்தில் பலதரப்பட்ட வகுப்பினரும் இப்பட்டத்தினை பயன்படுத்தி இருந்ததை காட்டுகிறது. இருப்பினும் கல்வெட்டுக்களில் வரும் பல பெயர்களை குறிப்பிடும் சமகால பாளி இலக்கியங்களில் ஒரு இடத்தில் கூட இப்பெயர் காணப்படாமை ஆராயப்பட வேண்டிய தொன்றாகும். இப்பட்ட பெயர் தமிழில் பெருமகன் என்ற பட்டத்தின் பிராகிருத வடிவம் என்பது அறிஞர்கள் பலரது ஏகோபித்த கருத்தாகும்.

தமிழில் பருமகன் பெருமகன் என்ற சொல் தலைவன், உயர்ந்தவன், அரசன், பெரியமகன், மூத்தமகன், அண்ணன் என்ற கருத்தை கொண்டுள்ளது. இதே கருத்தையே மலையாளம் கன்னடம் ஆகிய மொழிகளிலும் காணமுடிகிறது. இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களிலும் பருமக, பருமகன் என்ற பட்டத்தை உடைய பலர் இதே கருத்தில் மதிக்கப்பட்டதை அவர்கள் வகித்த பதவிகளில் இருந்து அறிய முடிகிறது. பருமக எனும் பட்டமானது காலப்போக்கில் மகா எனும் அடைமொழியுடன் அரசர்களைக் குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. சான்றாக கி.பி நான்காம் நூற்றாண்டிற்குரிய தான மட்டக்களப்பின் குடும்பிமலையில் அண்மைக் காலத்தில் கண்டறியப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டொன்றில் மகாபருமக எனும் பதம் நாட்டினுடைய அரசனைக் குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. அனுராதபுரக் காலத்தினைப் பொறுத்த வரையில் மன்னர்கள்மகாராஜ என்ற பதத்தைப் பயன்படுத்தியுள்ளனர். மகாபருமக எனும்

சொல் மகாராஜ எனும் சொல்லிற்கு இணையான ஒரு பதமாக இருத்தல் வேண்டும். சாசனத்தில் மகாபருமகசிறி சங்கபோதி அபய மகாராஜன் என எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். குடும்பிமலைச் சாசனம் மகாபருமக ஸ்ரீ சங்கபோதி அபய மகாராஜனின் இரண்டாவது ஆட்சியாண்டில் எழுதப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. இதில் மகா பருமக என்பது பதவி நிலைப் பெயரைக் குறிப்பதாகும்.

பருமகவின் மனைவியாக ஈச்சிலம் பற்றை (I.C 386), களுதுபொதான (I.C 397), விஹாரகல (I.C 531) ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுக்களில் முறையே சவினியா, சுமனா ஆகிய பெண்களின் பெயர்கள் காணப்படுகினறன. நாட்டின் ஏனைய இடங்களில் உள்ள சில கல்வெட்டுக்களில் பருமகள எனும் பெண்பால் வடிவம் காணப்படுகின்ற போதும் இங்குள்ள கல்வெட்டுக்களில் அத்தகைய நிலையைக் காணமுடியவில்லை. எனினும் சமூகத்தின் தலைமையாளராகக் கருதப்படும் பருமகவின் மனைவி என்ற உயர்நிலையிலுள்ள பெண்களாலேயே இக்குகைத் தானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.2 அயவின் மனைவி மற்றும் அபி

ரஜகலக் கல்வெட்டில் (I.C 422) மஹா அயவின் மனைவி யாஹாஸினி என்பவள் வழங்கிய குகை பற்றிக் கூறப்படுகின்றது. இங்கு “அய” என்பது “அய்யன்- ஐயன்” என்பதற்குச் சமமானதாகும். இது உயர் நிலையிலுள்ள ஆணைக் குறிக்கும் சொல்லாகும். அபியின் ஆண்பால் வடிவமே இது என வரலாற்றாசிரியர்கள் கருதுவர். இங்கு மஹாராஜ காமினி திஸவின் மகனாக அயவும், மருமகளாக யாஹாஸினியும் பெயர் குறிப்பிடப்படுகின்றனர். பு$_3$தத$_3$த என்பவளும் மஹா அயவின் மனைவியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளாள்.

“அபி” என்பது “அவ்வை, ஐயை” போன்ற பதங்களின் மருவுதலாக அமையலாம். ரஜகலக் கல்வெட்டில் (I.C 427) மஹாராஜா கமினி திஸவின் மகனான இளவரசன் திஸவின் மனைவியான ஜதியினால் வழங்கப்பட்ட குகை என வருகின்றது. இங்கு ஜதி எனும் பெயரின் முன்னொட்டாக “அபி” என்பது இடம்பெறுகின்றது. ரஜகலவில் உள்ள மற்றுமொரு கல்வெட்டில் ஸமிக என்பவள் திஸவின் மனைவியாகக் குறிப்பிடப் பட்டுள்ளாள். ஆனால் அங்குள்ள மற்றுமொரு கல்வெட்டில் (I.C 427) அதே இளவரசனது பெயர் குறிக்கப்பட்டு அவனது மனைவி எனப்படும் பெண் “அபி” என்ற முன்னொட்டுடன் அறிமுகமாக, இப்பெண்ணுக்கு அவ்வாறான எவ்வித விருதுப் பெயரும் இல்லாது வெறுமனே ஸமிக என அழைக்கப்பட்டுள்ளாள். அவ்வாறாயின் அரசனுக்கு பல மனைவியர் இருப்பினும் பட்டத்து ராணியாக ஒருவர் மட்டுமே காணப்பட்டமையை ஒத்தவகையில் சமூகத்தின் உயர்ந்தவரின் ஒரு மனைவி மட்டும் “அபி” என்ற விருதுப் பெயரைச் சூடியிருத்தல் வேண்டும்.

அதேபோன்று மற்றுமொரு கல்வெட்டில் அரச குடும்பத்தைச் சேர்ந்த அபி அனுரதி என்னும் பெண் குறிப்பிடப்பட்டுள்ளாள். (I.C 550) இவள் ரஜ உதியின் மகன் அய அபயவினுடைய மகளாகச் சுட்டப்பட்டுள்ளாள். வவுனியா மாவட்டத்திலுள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் அபி அனுரதி என்னும் பெண் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.இங்கு அரச குடும்பத்துப் பெண்களில் சிலர் அபி என்ற விருதுப் பெயரைச் சூடியிருந்தனர் எனக் கருதலாம்.

### 6.3 வணிகரின் மனைவி

அக்கரைப்பற்று குடுவில் எனுமிடத்திலுள்ள கல்வெட்டொன்றில் (I.C 480) “திகவாபி ரன வணிகன .. .. ... .. .. .. ய புதன ப$_3$ரியய த$_3$மேட திஸய லெனே” என வருகின்றது. இதில் திகவாபியைச் சேர்ந்த வணிகன் ஒருவனது மனைவியாக “தமேட திஸ” எனும் பெண் பெயரிடப்பட்டுள்ளாள்.

தமிழ் பெண் ஒருத்தி "திஸ" என்ற பெயர்கொண்டு அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். இங்கு குறித்த பெண்ணின் கணவனது பெயருடன் இவனது ஊர்ப்பெயரான தீகவாபி என்பதும் குறிப்பிடப் படுகின்றது. எனவே இப்பகுதியில் கிறிஸ்து விற்கு முற்பட்ட காலம் முதலாக தமிழர் வாழ்துள்ளமைக்கும், அவர்கள் செல் வாக்குப் பெற்றிருந்தமைக்கும் இக்கல் வெட்டு சிறந்த சான்றாக அமைகின்றது. திஸ எனும் இத்தமிழ்ப் பெண் தனது பெயரால் குகையினைத் தானமாக வழங்கியுள்ளாள். இத்தானம் யாருக்கு வழங்கப்பட்டது என்பது தொடர்பான பகுதி சிதைவடைந்துள்ளபோதிலும் குறித்த பிராந்தியத்தில் கிடைத்துள்ள சாசனங்கள் யாவும் பௌத்தத்துடன் தொடர்புடையவை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே தமிழ் பெண்ணொருத்தி பௌத்த சமயத்தைச் சேர்ந்தவளாக இருந்துள்ளமை இதனூடாகப் புலப்படுகின்றது. இதனடிப்படையில் கிழக் கிலங்கைப் பகுதியில் புராதன காலம் முதலாக தமிழ்ப் பௌத்தம் நிலை பெற்றி ருந்தமைக்கு இக்கல்வெட்டும் சிறந்த சான்றாக அமைகின்றது.

### 6.4 பெண் துறவி

வெல்லாவெளியில் பேராசிரியர். சி.பத்மநாதன் அவர்களால் கண்டறியப்பட்ட கல்வெட்டொன்றில் சமணப் பெண் துறவி பற்றிய வரலாற்றுச் செய்தி காணப்படு கின்றது. "சிப்பு க,ல க,மி குரத்தி மீ குரத்தி வேமி பெருவணிக" என அதில் எழுதப் பட்டுள்ளது. பேராசிரியர் இந்த சாசனத் தொடரை இரு வசனங்களாகக் கொண்டு, இச்சாசனம் இரண்டு குரத்திகளைப் பற்றியதாகும் என்று கருதுகின்றார். இச்சாசனம் சமண சமயத்து பெண் துறவியரைப் பற்றியது. குரத்தி என்பது குரவர் என்பதன் பெண்பால் வடிவம். இதற்கு காலத்தாற் பிற்பட்ட தமிழகக் கல்வெட்டுக் களிற் பத்தினிக் குரத்தியார் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மீ என்பது தமிழ் வழக்கில் முதன்மை, தலைமை, மேன்மை என்பவற்றைக் குறிக்கின்றது. எனவே குரத்திகள் குழுவொன்றின் தலைவியினையே மீ குரத்தி எனக் குறிப்பிட்டுள்ளனர். இலங்கையிலுள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் சமணப் பெண் துறவி பற்றிக் கூறுகின்ற ஒரேயொரு கல்வெட்டாக இது அமைகின்றது.

சமய நெறிகளில்பெண்கள் துறவற வாழ்க்கை வாழ்ந்தமைக்கு பல்வேறு இலக்கிய சான்றுகள் காணப்படுகின்றன. மகாவம்சத்தில் சங்கமித்தை,அனுலா ஆகிய துறவிகள் பற்றியும், தமிழக இலக்கியங்களில் மணிமேகலை, காரைக் காலம்மையார் முதலானோர் பற்றியும் அறிகின்றோம். அந்த வரிசையில் மட்டக்களப்பில் கிடைத்துள்ள இக்கல் வெட்டினூடாக பெண்கள் துறவறம் மேற் கொண்டுள்ளமை தெளிவாக்கம் பெறு கின்றது.

### 6.5 ஏனைய பெண்கள்

பெரும்பாலும் இலங்கைப் பிராமிச் சாசனங்களில் அடையாளங் காணப்படு கின்ற பெண்கள் பற்றிய அறிமுகமானது அவர்களது கணவரை மையப்படுத்திய தாகவே சுட்டப்படுகின்றது. ஆனால் சில பெண்கள் உயர் குலத்தவர்களுடன் தொடர்புடையவர் களாக அல்லாமல் (அதாவது பருமக, கமிக, ரஜ ஆகியோரது உறவினர் அல்லர்) தனியாகக் குறிப்பிடப் பட்டுள்ளனர். உதாரணமாக கனய (415), ஸமிதத்த (417), கனதாணிக (420) என்பவற் றைக் குறிப்பிடலாம். இவர்கள் பற்றிய விடயங்களை அறிவதற்கு மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

### 7. முடிவுகள்

இலங்கையில் பௌத்தம் நிலை கொண்ட போது உள்வாங்கப்பட்ட சமூகங் களில் பெண்களும் பாரிய பங்கினைக் கொண்டிருந் தமைக்கு பிராமிக் கல்வெட்டுக் கள் சிறந்த சான்றாக அமைகின்றன. பாளி

இலக்கியமான மகாவம்சத்திற் கூறப்பட்டுள்ள அரசாட்சி பற்றிய செய்திகளிலே பெண்களின் அரசியல், சமய, சமூகப் பணிகள் கூறப்பட்டுள்ளன. அனுலா தேவி, விகாரமாதேவி முதலான அரசகுலப் பெண்கள் பெற்றிருந்த முக்கியத்துவம் அதில் புலப்படுத்தப்படுகின்றது.

பிராமிக் கல்வெட்டுக்களில் ஏறத்தாழ பதினெட்டில் பெண்கள் உபாசிகைகளாக (பக்தை) குறிப்பிடப்பட்டுள்ளனர். இக்கல் வெட்டுக்கள் எழுதப்பட்ட காலம் முதலாக பெண்கள் தமது சமய ரீதியான நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு உரிமையுடையோராகக் காணப்பட்டுள்ளனர். வெல்லாவெளியில் அண்மையில் கண்டறியப்பட்டுள்ள கல்வெட்டொன்றில் பெண் துறவி ஒருவர் பற்றிக் கூறப்படுகின்றது. இது பெண்களின் சுதந்திரமான சமய நடவடிக்கையை மேலும் உறுதிப்படுத்துகின்ற சான்றாக அமைகின்றது.

இக்கல்வெட்டுக்களில் உயர்நிலையிலுள்ள பெண்கள் பற்றியே அதிகளவில் பேசப்படுகின்றது. சமூகத் தலைமையாளராகக் கருதத்தக்க பருமக, ஊர்த் தலைமையாளரான கமிக, மகாராஜாவின் மகனான அய (இளவரசன் அல்லது உயர் குலத்தவன்), கிராமத் தலைவனான கமிக, வணிகர் ஆகியோரின் மனைவியராகவும், "அபி" எனப்படும் உயர்குலப் பெண்ணாகவும் இவர்கள் பெயர் குறிப்பிடப் படுகின்றனர். பொதுவாக கல்வெட்டுக்களில் உயர்நிலையில் உள்ளோர் பற்றியே பேசப் படுகின்றமையால் அதில் இடம்பெறுகின்ற பெண்களும் அத்தகையோராகவே காணப் படுகின்றனர்.

பல்வேறு வரலாற்றுக் காலகட்டங்களிலும் சாஸ்திர விதிகளை அடிப்படையாகக் கொண்ட விதிகள் பெண்கள் விடயத்தில் செல்வாக்கு மிக்கவையாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் பெண்களுக்கு எந்தளவுக்கு சொத் துரிமை இருந்தது என்பது பற்றியும் பெண்களின் அடையாளங்கள் வகுக்கப்பட்ட வழிமுறைகள் பற்றியும் இயன்றளவு துல்லியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். பிராமிக் கல்வெட்டுக்கள் சமூக அடையாளம், சொத்தின் மீதான கட்டுப்பாடு போன்ற பிரச்சினைகள் தொடர்பான நேரடியான ஆதாரங்களைத் தருகின்றன.

பெண்கள் தமது பெயரினால் குகைத் தானங்களை வழங்கியமையை பார்க்கின்ற போது அக்காலம் முதலே சொத்துடைமை உடையவர்களாகவும், தமது இஸ்டப்படி அதனை வழங்குகின்ற உரிமையுடையோராகவும் இவர்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது. ஏனெனில் உரிமையுடைய ஒன்றையே தானமாக வழங்க முடியும். புராதன கால எகிப்திய சமூகத்தில் திருமணமான மற்றும் திருமணமாகாத எந்தப் பெண்ணும் தனது விருப்பின்படி எவ்வகைக் கொடுக்கல் வாங்கலும் மேற்கொள்ள உரிமையுடையவளாகக் காணப்பட்டாள். இதில் கணவனோ தந்தையோ தலையீடு செய்ய முடியாது. எனினும் கிழக்கிலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் பெண்களைப் பெயரிடுகின்ற போது கணவர் அல்லது தந்தையரின் பெயர் குறிப்பிடுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இது பெண்களின் முழுமையான சுதந்திரத்தில் எத்தகைய தாக்கத்தை செலுத்தியது என்பது ஆய்விற்குரியது. இருந்தபோதும் தானமானது குறித்த பெண்களால் வழங்கப் படுவதாகவே கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. எனவே புராதன கால எகிப்து, பபிலோனியப் பெண்கள் போலவும், இன்றுவரை கிழக்கிலங்கையின் மரபுகளில் பேணப்படுகின்ற தாய்வழி முறையான மருமக்கள் தாய மரபை ஒத்தவகையிலும் இப்பெண்களும் சொத்துடையவர்களாகவும் விளங்கியமைக்கு இக்கல்வெட்டுக்கள் சிறந்த சான்றாக அமைகின்றன.

6.1:கிழக்கிலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் பெண்கள் பற்றிய விபரம்

| இடம் | பெண்கள் | கணவர் | தந்தை |
| --- | --- | --- | --- |
| ஈச்சிலம்பற்றை | சவினியா | பருமக திஸ | - |
| ஈச்சிலம்பற்றை | தேவி | மஹா திஸ மஜிம | - |
| கஞ்துபொதான | சுமனா | பருமக சடன | - |
| மியுன்குணாவெகர | கனய | - | - |
| மியுன்குணாவெகர | ஸமிதத்த | - | - |
| மியுன்குணாவெகர | கனதாஸிக | - | - |
| ரஜகல | யஹாஸினி | மஹா அய | - |
| ரஜகல | பு;தத;தய | மஹா அய | - |
| ரஜகல | ஸிமிகய | திஸ | - |
| ரஜகல | அபி; ஐதி | திஸ | - |
| வேஹரகல | ரேவா | உபாசக திஸ | - |
| வடினகல | உபலா | - | - |
| குடுவில் | தமேட திஸ | திகவாபி வணிகன் | - |
| கிரிபொதுனஹெல | தேவி | க;மிக அனுதி | - |
| விஹாரகல | - (மனைவி) | பருமக கணதத்த | - |
| விஹாரகல | திஸ | க;மிக சுமன | - |
| வெல்லாவெளி | மீ குரத்தி, கமி குரத்தி | (பெண் துறவி) | - |
| வொவெட்டாஹெல | அபி அனுரதி | - | அய அபய |

## உசாத்துணைகள்


சிற்றம்பலம்,சி.க., (1993). யாழ்ப்பாணம் - தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு

பத்மநாதன்,சி., (2006). இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு

பத்மநாதன், சி., (2013).இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்-II, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு

பரமு புஸ்பரட்ணம், (2003).பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும், கொழும்புத் தமிழ்ச் சங்கம்

Paranavitana,S., (1970).Inscription of Ceylon- vol-01, Colombo